# ஆமையின் ஆசை



ஒரு குளத்தில் ஓர் ஆமை வசித்தது. அதற்கு வானத்தில் பறக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசை இருந்தது. அது எந்தப் பறவையைக் கண்டாலும் ''எனக்குப் பறக்கக் கற்றுத் தாருங்கள்'' என்று கெஞ்சிக் கேட்கும்.



ஒருநாள் சிட்டுக்குருவி ஒன்றை ஆமை கண்டது.

''எனக்கு ஓர் உதவி செய்வாயா?'' என்று கேட்டது.

''உதவியைச் சொல்; முடியுமானால் செய்கின்றேன்'' என்று குருவி சொன்னது.

''உன்னைப் போல் உலகையே சுற்றிவர எனக்கு ஆசை. பூமியில் ஊர்ந்து ஊர்ந்து எனக்கு அலுத்துவிட்டது'' என்றது ஆமை.

''ஆமையாரே! மண்ணில் பறக்க முடியாது. வானத்தில் பறந்து பயிற்சி செய்ய வேண்டும்'' என்று சிட்டுக்குருவி கூறி பறந்து போனது.

மற்றொரு நாள் ஆமை காகம் ஒன்றைக் கண்டது.



சிட்டுக்குருவியிடம் கேட்டது போலவே காகத்திடமும் கேட்டது.



காகம் ''நீரோ பெரியவர். உம்மைத் தூக்கிக் கொண்டு என்னால் பறக்க முடியாது. மன்னித்துக் கொள்ளும்'' என்றது.

இன்னொரு நாள ஆமை கழுகு ஒன்றைக் கண்டது.

''கழுகு அண்ணாவே என்னை மேலே தூக்கிச் செல்லுங்கள். நான் விடச் சொல்லும் இடத்தில் விட்டு விடுங்கள். நான் மெது மெதுவாகப் பறக்கக் கற்றுக் கொள்கின்றேன்'' என்று கூறியது.

ஆமையின் வேண்டுகோளை கழுகு ஏற்றுக் கொண்டது. கழுகு ஆமையைத் தனது கால்களால் தூக்கிக் கொண்டு வானத்தில் பறந்தது. ஆமை விடச் சொன்னதும் வான வெளியில் விட்டது.

ஆமை வேகமாக நிலத்தை நோக்கி வந்தது. நல்ல வேளை அது ஒரு குளத்திற்குள் தொப்பென்று விழுந்தது. ''தரையில் அல்லது பாறையில் விழுந்திருந்தால் சிதறி இருப்பேன்'' என்று ஆமை எண்ணியது. இதன் பின்பு ஆமை பறக்கும் ஆசையைக் கைவிட்டது. ''ஆசைக்கும் அளவுண்டு'' என்பதை உணர்ந்து கொண்டது.

குறிப்பு :
* தெளிவாக உரத்து வாசிக்க வழிப்படுத்துக.
* பாத்திரமேற்று உணர்வு பூர்வமாக வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
* இது போன்று பொருத்தமான கதைகளை பழமொழிகளுடன் தொடர்புபடுத்தி கூறுக.
* அரும்பதங்களின் பொருள் கூறி விளக்குக.
  (உ-ம்) கற்றல், அலுத்துவிடல், பயிற்சி, மன்னித்தல், கைவிடுதல்